# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.274/2021

சாட்சி : PW– 1
பெயர் : திரு. மாணிக்கம் தேதி : 02.07.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( பிரதிவாதிகள் தரப்பில்)

என் தகப்பனார் சடைய கவுண்டர் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதியும் விவசாயம்தான் செய்து வருகிறோம் என்றால் சரிதான். வாழப்பாடி தாலுக்கா, கீரிப்பட்டி கிராமத்தில் உள்ள என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளில் நானும், 1ம் பிரதிவாதியும் தனித்தனியாக விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கு பிரிந்த சொத்து வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பிரிந்த சொத்து தெற்கு பகுதியில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு பகுதி சொத்திற்கும் இடையில் வண்டி பாதை ஏற்கனவே இருந்தது அதனை தான் பயன்படுத்தி வருகிறோம். எனக்கு பாத்தியப்பட்ட நான் மஞ்சள் சாகுபடி செய்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தெற்கு பகுதி சொத்தில் அவரும் மஞ்சள் சாகுபடி செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தனியாக அனுபவித்து வரும் சொத்தில் சுமார் 1000 பாக்கு மரங்கள் மற்றும் சுமார் 20 தென்னை மரங்கள் உள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1ம் பிரதிவாதி அனுபவித்த சொத்தில் 200 பாக்குமரங்கள் மற்றும் 30 தென்னை மரங்கள் இருந்தது. என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை நானும், எனது சகோதரரான 1ம் பிரதிவாதியும் ஊரில் பஞ்சாயத்து பேசி பிரித்து தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

வாய்மொழியாக தான் பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் ஆமாம். பத்திரம் எதுவும் எழுதி கொள்ளவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே எங்களுக்குள் வாய்மொழியாக சொத்துகளை பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். என் தகப்பனார் சடைய கவுண்டருக்கு 2 மனைவிகள் என்றால் சரியல்ல. அவரது முதல் மனைவி பெயர் கரியம்மாள் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சடைய கவுண்டர் மற்றும் கரியம்மாளுக்கு இடையே 3 பெண் பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு சொத்துகள் கீரைப்பட்டி கிராமத்திலும், புழுதிக்குட்டை கிராமத்திலும் அமைந்துள்ளது என்றால் சரிதான். புழுதிக்குட்டை கிராமத்திலுள்ள சொத்துகளை பொறுத்து எங்களுக்கிடையே 24.05.1988 ஒரு எழுத்து மூலமான பாகப்பிரிவினை ஏற்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின்படிக்கு பிரிந்த சொத்துகளை அவரவர்கள் பாகத்தை அவரவர்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை தான் இவ்வழக்கில் 2வது அட்டவணை சொத்தாக காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து ஏற்கனவே எழுத்துமூலமான பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதால் அந்த சொத்தை பொறுத்து மீண்டும் பாகப்பிரிவினை கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்தை பொறுத்து எங்களுக்குள் ஏற்கனவே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு விட்டதால் அந்த சொத்தை பொறுத்து மீண்டும் பாகப்பிரிவினை கோர இயலாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு 1 முதல் 3 வாதிகள் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கு என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் ஆகி அவர்களின் கணவர் வீடுகளில் வசித்து வருகிறார்கள் என்றால்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் 2011ம் ஆண்டிலிருந்து 1ம் பிரதிவாதி தார்சு வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்குண்டான வீட்டு வரி, மின்இணைப்பு மற்றும் இதர ஆவணங்கள் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி பெயரில்தான் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வீட்டை அரசு நிதி உதவியுடன் என் தாயார் பெயரில் கட்டியுள்ளார்கள். ஆனால் அந்த வீட்டில் 1ம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தாவா முதல் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை உயர் மின்னழுத்த கோபுரம் மற்றும்கம்பிகள் அமைப்பதற்கு ஆர்ஜிதம் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கம்பி தடம் அமைப்பதற்காக அந்த சொத்திலிருந்த பாக்குமரங்கள் மற்றும் தென்னை மரங்களை வெட்டி அப்புறப்படுத்தினார்கள் என்றால் சரிதான். மேற்படி கம்பி தடம் அமைப்பதற்காக இழப்பீட்டு தொகையாக ரூ.54,37,225/- ஐ நிர்ணயம் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி தொகை முழுவதையும் 1ம் பிரதிவாதி தனக்கு தான் வேண்டும் என்று கேட்ட காரணத்தினால் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் பாக்குமரங்களை நட்டு பராமரித்து வந்ததில்தான் சுமார் 600 பாக்குமரங்கள் அப்புறப்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பாக்குமரங்கள் என் தகப்பனாரால் வைக்கப்பட்டது ஆகும். எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே 15.01.2005ல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு நாங்கள் தனித்தனியாக தான் சொத்துகளை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வெட்டி அகற்றிய பாக்குமரங்களின் வயது சுமார் 20 இருக்கும். 1ம் பிரதிவாதி அனுபவித்து வந்த சொத்திலிருந்த பாக்குமரங்கள் தான் 2ம் பிரதிவாதியால் வெட்டி அகற்றப்பட்டது என்றும், அதனால்தான் 1ம்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

பிரதிவாதி தனக்கு மட்டும் மேற்படி இழப்பீட்டு தொகையை முழுமையாக வழங்கவேண்டும் என்று உரிமை கோரினார் என்றால் சரியல்ல. மேற்படி கம்பி தடம் அமைப்பதற்காக என்னுடைய 30 தென்னை மரங்கள் வெட்டி அகற்றப்பட்டது. அதனால் 2ம் பிரதிவாதி என்னையும், 1ம் பிரதிவாதியையும் அழைத்து எனக்கு ரூ.12 லட்சமும், 1ம் பிரதிவாதிக்கு ரூ.42,37,225/–யும் ஒதுக்கீடு செய்திருப்பதாக தெரிவித்தார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனக்கு இது சம்மந்தமாக அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். என்னுடைய பாக்குமரங்கள் சுமார் 1000 தற்போதும் பூமியில் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் வீட்டையும், எனதுபாக்குமரங்களையும், எனது தென்னை மரங்களையும் இவ்வழக்கில் சொத்து விவரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 வாதிகள் 2ம் பிரதிவாதியிடமிருந்து எந்தவொரு நஷ்டஈட்டு தொகையும் பெற இயலாது என்றால் சரியல்ல. எனது தூண்டுதலின்பேரில் தான் 1 முதல் 3 வாதிகள் என்னுடன் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது வழக்கு மற்றும் முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றும், எனவே எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem